செய்தி வெளியீடு எண் :360 நாள் : 22.02.2023

## செய்தி வெளியீடு

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், புழுதிக்குட்டை கிராமத்தில் அமைந்துள்ள ஆனைமடுவு நீர்த்தேக்கத்திலிருந்து பழைய பாசனப் பகுதிகளுக்கு 23.02.2023 காலை 8.00 மணி முதல் அணையின் தலைமை மதகின் (Head Sluice) மூலம் தினசரி 50 கன அடி / வினாடி நாளொன்றுக்கு 4.32 மில்லியன் கன அடி வீதம் 16 நாட்களுக்கு 69.12 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், புதிய பாசனப்பகுதிகளுக்கு 11.03.2023 காலை 8 மணி முதல் அணையின் வலதுபுற கால்வாயின் மூலம் தினசரி 35 கனஅடி / வினாடி மற்றும் இடதுபுற கால்வாயின் மூலம் தினசரி 15 கனஅடி / வினாடி என மொத்தம் 50 கனஅடி / வினாடி வீதம் நாளொன்றுக்கு 4.32 மில்லியன் கன அடி வீதம் 11 நாட்களுக்கு மொத்தம் 47.52 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், சிறப்பு நனைப்பாக (Special Wetting) தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டத்திலுள்ள புழுதிக்குட்டை, குறிச்சி, சின்னமநாயக்கன்பாளையம், சந்திரபிள்ளை வலசு, கோலத்துகோம்பை மற்றும் நீர்முள்ளிக்குட்டை ஆகிய கிராமத்திலுள்ள பாசன நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமை செயலாளர்.**
**நீர்வளத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in